**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்3516/ஆ4/ 2024 நாள்.13.03.2025**

**பொருள் :** பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் –மேல்நிலை இரண்டாமாண்டு மற்றும் முதலாமாண்டு 11.03.2025 வரை நடைபெற்று முடிந்த தேர்வுகளில் – பங்குபெறாத மாணவர்களின் விவரம் பள்ளிகளுக்கு தெரிவித்தல் –ஜூன்/ஜூலை –2025 துணைத்தேர்வில் –பங்குபெற ஏதுவாக பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் நடவடிக்கை எடுத்திட தெரிவித்தல் –தொடர்பாக

**பார்வை :** தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.25/DSE /PC /2025 நாள் 08.03.2025

----

பார்வையில் காணும் பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க நடைபெற்றுக்கொண்டிருக்கும் மார்ச் –2025 மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் பாடத் தேர்வுகளில் பங்குபெறாத (Absent) மாணவர்களின் பட்டியல் , பள்ளி வாரியாக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மேலும் அனைத்துப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக்பள்ளிகளின் முதல்வர்கள் 11.03.2025 வரை நடைபெற்று முடிந்த தேர்வுகளில் வருகை புரியாத மாணவ /மாணவியரின் காரணங்களை கேட்டறிந்து ,அம்மாணவர்களுக்கு ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை வழங்கி தேர்வின் முக்கியத்துவத்தினை குறிப்பிட்டு இனிவரும் தேர்வுகளில் வருகை புரியும் வகையில் ஊக்கப்படுத்திடவும் மாணவர்கள் தொடர்ந்து கல்வி பயில சார்ந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே அம்மாணவர்கள் தொடர்ந்து பள்ளிக்கு வருகிறார்களா என்பதனை உறுதி படுத்தியும் அல்லது இடையில் வேறு ஏதேனும் ITI /DIPLOMA படிக்க கல்லூரிகளில் சேர்ந்துள்ளார்களா என்பதனை இத்துடன் இணைப்பில் காணும் உரிய படிவத்தில் பூர்த்தி செய்து வேலூர்,ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி (SSA ) அலுவலகத்தில் சமர்ப்பித்திட அனைத்து வகை மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பு: இத்துடன் இணைப்பில் காணும் மேல்நிலை முதலாமாண்டு/arrear மற்றும் இரண்டாமாண்டு பாடத்தேர்வுகளில் பங்குபெறாத மாணவர்களை கண்டறிந்து வருகின்ற ஜூன் /ஜூலை 2025 துணைத்தேர்வில் பங்குபெற்று தேர்ச்சி அடைய மாணவர்களை தயார்படுத்திட அனைத்து வகை மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. படிவம்
2. மாணவர்களின் பட்டியல் (பள்ளிவாரியாக )

//ஓம்.செ.மணிமொழி //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

- அனைத்து வகை மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் வேலூர் மாவட்டம்.
- உதவி திட்ட அலுவலர் ,ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி (SSA),வேலூர் –06.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி) அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பப்படுகிறது.